**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 11 /2022 PW . 1**

| | |
|---|---|
| **பெயர் : ஐஸ்வர்யா** | **தந்தை/கணவர் பெயர்: ரகுபதி** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2024

---

**(எதிரி ஆஜர்).**

**<u>07.11.2024 முதல் விசாரணை:</u>**

1. நான் நைனார்ப்பட்டியில் குடியிருக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். ஆஜர் எதிரி தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர். 16.01.2021ம் தேதி மாலை நான் வழக்கம் போல் மாடுகளை கட்டுவதற்காக வயலுக்கு சென்றுவிட்டு மாடுகளை கட்டிய பிறகு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது கொம்புதிருகிகண்மாய் கரையில் வந்த போது மாலை சுமார் 5.30 மணிக்கு அங்கு வந்த எதிரி என்னுடன் மல்லுக்கட்டினார். என் வாய்யை பொத்தி என்னை கற்பழிக்கும் நோக்கத்தோடு வாயை பொத்தினார். அப்போது எதிரியின் கைவிரல்களை நான் கடித்துவிட்டேன். அதில் என்னுடைய கீழ் தாடையில் அமைந்துள்ள பல் உடைந்து காயமானது. எதிரியிடமிருந்து நான் தப்பிப்பதற்கு முயற்சி செய்த போது நான் கீழே விழுந்ததில் எனக்கு முள் குத்தி காயம் ஏற்பட்டது.

2. நான் அங்கிருந்து தப்பித்து என்னுடைய நாத்தனார் வீட்டிற்கு சென்றேன். என் வீட்டில் யாரும் இல்லை என்பதால் சம்பவம் நடந்தவுடன் என் நாத்தனார் வீட்டிற்கு சென்றேன். என் நாத்தனார் ரேவதி கேட்டதற்கு நான் நடந்த விவரத்தை சொன்னேன். பிறகு மலேசியாவில் பணிபுரியும் எனது கணவருக்கு தகவல் சொன்னேன். என் நாத்தனார் மகன் பாரதி கண்ணன், எனது மாமியார் ராமாயி மற்றும் நான் ஆகிய மூவரும் குழந்தைகளை என் நாத்தனாரிடம் விட்டுவிட்டு எஸ்எஸ்கோட்டை காவல்நிலையத்திற்கு சென்று நடந்த விவரத்தை சொல்லி எழுதி புகார் மனு கொடுத்தேன். அப்போது மாலை 7.20 மணி இருக்கும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார் ஆகும். அந்த புகாரை நான் தான் எழுதினேன். **அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் புகார் கொடுத்ததற்கு மனு ரசீது கொடுத்தார்கள். மறுநாள் வழக்கு பதிவு செய்ததாக சொன்னார்கள். என்னுடைய உடம்பில் காயங்கள் இருந்ததால் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பினார்கள். மருத்துவமனையில் நான் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். மறுநாள் என்னை மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. நான் 10 வகுப்பு படித்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து மறுநாள் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 16.01.2021ம் தேதி புகார் கொடுத்தேன். அந்த புகாரை நான்

தான் எழுதினேன். நான் மறுநாள் புகார் கொடுத்ததால் தான் புகாரில் தேதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 16ம் தேதி நான் புகார் கொடுத்துவிட்டேன். பின்யோசனை செய்து முதல் நாள் தேதியிட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கொம்புதிருகிகண்மாய் கரையில் வந்த போது மாலை சுமார் 5.30 மணிக்கு அங்கு வந்த எதிரி என்னுடன் மல்லுக்கட்டினார் என்ற விவரத்தை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும் எதிரியின் குடும்பத்திற்கு ஏற்கனவே விரோதம் உள்ளது என்றால் இல்லை. எதிரி சம்பவத்திற்கு முன்பு வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். எதிரியின் மனைவியும், நானும் தோழிகள் என்றால் சொந்தம். தோழி கிடையாது. நான் எதிரியின் மனைவியிடம் தவறாக சொல்லி எதிரியின் குடும்பத்தை பிரித்ததாக ஏற்கனவே பிரச்சனை இருந்தது என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரியும், அவரது மனைவியும் பிரிந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 5.30 என்றாலும் மருத்துவமனைக்கு இரவு 8.55 மணிக்கு சென்றேன் என்றால் சரிதான். வீட்டில் கேட்டுவிட்டு காவல்நிலையம் சென்று 7.20 மணிக்கு புகார் கொடுத்துவிட்டு பின்பு மருத்துவமனைக்கு சென்றேன்.

4. காவல்நிலையத்திற்கும் திருப்பத்தூர் மருத்துவமனைக்கும் இடையே 8 கி.மீ தூரம் என்றால் சரிதான். எஸ்எஸ்.கோட்டை காவல்நிலையம் காரைக்குடி-மதுரை மெயின் ரோடு என்றால் சரிதான். அனைத்து பேருந்துகளும் அங்கு நின்று தான் செல்லும் என்றால் இல்லை. காவல்நிலையத்தில் நிற்காது. பேருந்து நிறுத்தத்தில் நிற்கும். பேருந்து நிறுத்தத்திற்கும், காவல்நிலையத்திற்கும் இடையே அரை கி.மீ தூரம் இருக்கும். நான் சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் பின்யோசனை செய்து தடுமாறி விழுந்த காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் வாயில் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்பு மறுநாள் மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தார்கள். மருத்துவரிடம் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து சொன்னேன். எதிரி வலுக்கட்டாயமாக செய்ததால் ஆடைகள் கிழிந்து நான் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

5. எனது ஆடைகள் முள் குத்தி கிழியவில்லை. நான் சொல்வது போல் எதிரியால் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியின் மனைவி பிரிவதற்கு நான் தான் முக்கிய காரணம் என்பதால் என்னிடம் வீட்டில் வந்து கேட்டதற்கு அதற்கு பழிவாங்கும் நோக்கோடு பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அடித்து எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் என்னை கற்பழிக்கும் நோக்கோடு எந்த குற்றமும் எதிரி புரியவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வேறு யாரும் இல்லை. பட்டியல் சாட்சி ரேவதி எனது நாத்தனார். பாரதிகண்ணன் நாத்தனார் மகன். ராமாயி எனது மாமியார். அழகம்மாள் எனக்கு தெரிந்த நபர். சேக்கம்மாள் எனது உறவினர். இவர்களை தவிர வேறு யாருக்கும் சம்பவம் பற்றி தெரியுமா என்றால் இல்லை. எனது கிராமத்தில் பல சாதினர்கள் உள்ளனர். சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் கிராமத்தில் உள்ள மற்ற நபர்களுக்கு சம்பவம்

தெரிந்திருக்கும் என்றாலும் உண்மையில்லாத சாட்சியம் என்பதால் வழக்கு சம்பவத்தை யாரும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

கு.வி. முடிவுற்றது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 11 /2022 PW . 2**

| | |
|---|---|
| **பெயர் : ராமாயி** | **தந்தை/கணவர் பெயர்: முத்தையா** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2024

---

**(எதிரி ஆஜர்).**

**07.11.2024 முதல் விசாரணை:**

1. நான் நைனார்ப்பட்டியில் குடியிருக்கிறேன். கூலி வேலைகு செல்கிறேன். அ.சா.1 எனது மருமகள். ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர். 16.01.2021ம் தேதி என்னுடைய மருமகள் அ.சா.1 மாடுகளை கட்டிவிட்டு வருவதற்காக தோட்டத்திற்கு சுமார் 4 மணிக்கு சென்றார். மாடுகளை கட்டிவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது கொம்புதிருகிகண்மாய் அருகே எதிரி என் மருமகளை கெடுக்கும் நோக்கத்தோடு வாயை பொத்தியுள்ளார். அப்போது எனது மருமகள் எதிரியின் கையை கடித்ததில் என் மருமகளுக்கு பல் உடைந்து காயம் ஏற்பட்டது. என் மருமகள் முள் மற்றும் கற்களுக்குள் விழுந்து தப்பித்து என் வீட்டிற்கு வந்து நடந்த விவரத்தை சொன்னார். எனது மகன் மலேசியாவில் உள்ளதால் அவரிடம் நான் நடந்த விவத்தை அலைபேசியில் சொன்ன பிறகு எஸ்எஸ்கோட்டை காவல்நிலையத்திற்கு கூட்டி சென்றேன். காவல்நிலையத்திலிருந்து திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது மருமகளுக்கு உடம்பில் ஊமைக்காயங்கள் ஏற்பட்டிருந்தது. முட்கள் ஒட்டிருந்தது. பல் உடைந்திருந்தது. மறுநாள் 17.01.2021ம் தேதி என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. என்னை போலீசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். காலை 9.30-10.00 மணிக்குள் விசாரணை செய்தார்கள். முட்கள் குத்தி எனது மருமகள் உடம்பில் காயம் இருந்த விவரத்தை விசாரணையில் சொன்னேன். புகார் கொடுக்க எனது மருமகள், நான், எனது பேரன் பாரதிகண்ணன் ஆகியோர் சென்றோம். எதிரியின் மனைவியும், எனது மருமகளும் தோழிகள் நெருக்கமாக இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரியின் மனைவி பிரிந்து விட்டு சென்றார் என்றால் சரிதான். எதிரியின் மனைவி பிரிந்ததற்கு எனது மருமகள் காரணம் என்பதால் எதிரியின் குடும்பத்திற்கும் எங்களுக்கும் பிரச்சனை என்றால் இல்லை. அவ்வாறு எந்த பிரச்சனையும் என்னிடமோ, எனது மகனிடமோ சொல்லவில்லை.

3. பிரச்சனை செய்த விவரம், மல்லுக்கட்டிய விவரம் எனது மருமகள் சொல்லிதான் எனக்குதெரியும். எதிரியின் மனைவி பிரிந்ததற்கு எனது மருமகள் காரணம் என்றாலும் அதனை எங்களிடம் தெரிவித்து எங்களுக்கு பிரச்சனை தெரியும் என்றாலும் எனது மருமகளுக்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியும், அவரது மனைவியும் தற்போது நிரந்தரமாக பிரிந்து விட்டார்கள் என்றால் சரிதான். நிரந்தரமாக பிரிந்ததற்கு எனது மருமகள் தான் காரணம் என்பதால் எங்களிடம் கேட்டார் என்றாலும் அதற்கு நாங்கள் பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எனது மருமகள் மாடு மேய்க்கும் போது தடுமாறி கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

கு.வி. முடிவுற்றது.